மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசு உருவாக்கியுள்ள திட்டத்தின்படி, நெய்வேலியில் 630 மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டதில், 176 மெகா வாட் மின்சாரம்தான் தமிழகத்திற்குக் கிடைக்கும். ஆனால் இரண்டாவது அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், முழு உற்பத்தியையும் தமிழகத்திற்கே தரவேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம். 3-வது திட்டத்தை நெய்வேலி நிறுவனம் தயார் செய்து கொண்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, தமிழகத்திற்குத் தருவதாகச் சொல்லப்படுகிற பங்கு மிகக் குறைவாக இருக்கிறது. நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையுமே தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுமா? அங்கிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் பயன் காரணமாக நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்குத் தமிழகம் உதவியாக இருக்கும் என்ற காரணத்தால், இது குறித்து நமது அரசு மத்திய அரசிடம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மத்திய அரசிடமும் இந்த அரசு வற்புறுத்தியுள்ளது. அது போதாதென்று இன்று மேலவையில் அது குறித்த தீர்மானம் ஒன்றும் வர இருக்கிறது.

கல்பாக்கம் அணு மின் நிலையம்.

*** 62. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்பாக்கம் அணு மின் நிலையத்திலிருந்து தற்போது உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டுக்கே வழங்கப்பட வேண்டும் என்று, மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற பதில் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கல்பாக்கம் அணு மின் நிலையத்தின், முதல் பிரிவின் மின்சாரத்தை முழு அளவையும் இரண்டாவது பிரிவில் 50 சதவிகிதம் மின்சாரத்தையும் தமிழ்நாட்டுக்கு வழங்க வற்புறுத்தி வருகிறது.

(இ) எந்தவிதமான இறுதி பதிலும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

1984 மார்ச் 8]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தை உருவாக்கியபோது, அதன் உற்பத்தி முழுவதுமே தமிழகத்திற்குக் கொடுக்கப்படும் என்று பிரதமர் அவர்களே வாக்குறுதி அளித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மைதானா? அப்படியானால் அதை வற்புறுத்துவதில் உள்ள நேரடியான தடை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் மூலமாகக் கிடைக்கக்கூடிய மின்சாரம் எவ்வளவு? அது முழுவதுமே நம் மாநிலத்திற்கு வந்தால்கூட, நம்முடைய மின் பற்றாக்குறை தீருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் மூலம் அங்கே உற்பத்தியாகிற 200 மெகா வாட் மின்சாரத்தில் அவர்களின் தேவையான 20 மெகா வாட் மின்சாரம் போக நமக்கு 180 மெகா வாட் மின்சாரம் கிடைக்கிறது. அது நம் தேவைக்குப் போதாது. கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் நமக்கு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக சென்னை அணு மின் நிலையத்திற்கு ரூ. 53 லட்சம் பெருமானமுள்ள 2,500 ஏக்கர் நிலம் தமிழக அரசால் இலவசமாக மத்திய அரசுக்கு வழங்கப்பட்டது. இதற்கு ஈடாக மேற்கூறிய அணு மின் நிலையத்திலிருந்து உற்பத்தியாகும் முழு மின்சாரத்தையும் தமிழகத்திற்கு வழங்குவதாகவும், இலவசமாக அளிக்கப்பட்ட நிலத்தின் கிரயத்தைக் கணக்கில் கொள்ளாமல் மின்சாரத்தின் விலையை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு அளிக்கப்படும் என்று 1968 ஆம் ஆண்டில் மேற்கூறிய அணு மின் நிலையத் திட்ட அதிகாரிகள் உறுதி அளித்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் பாரதப் பிரதமர் அவர்களே கூட, நாடாளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது, கல்பாக்கத்தில் இரண்டு யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யும் போது முதலாவது யூனிட்டில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் தமிழகத்திற்குக் கொடுக்கப்படும் என்றும், இரண்டாவது யூனிட் மின்சாரத்தில் பாதி— அதாவது 50 சதவிகிதம் தமிழகத்திற்குத் தரப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கல்பாக்கம், நெய்வேலி ஆகிய மின் திட்டங்களையெல்லாம் பற்றிக் கேள்விப்படுகிறபோது, மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறோம். ஆனால் திட்டம் முடிவடைகிறபோது அதிலே பங்கு கேட்க பலர் வருகிறார்கள். அது மட்டுமல்லாமல், மின்சாரத்தை வெளியே கொண்டு செல்லுகிறபோது 'டிரான்ஸ்மிஷன் லாஸ்' அதிகம் ஏற்படுகிறது. அதையெல்லாம் உணர்ந்து தமிழகத்திற்கு முழு மின்சாரத்தையும் தரவேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கல்பாக்கம், நெய்வேலி இரண்டாவது அனல் மின் திட்டங்களைப் பொறுத்தவரையில், தமிழகத்திற்கு முழுவதையும் தர வேண்டுமென்று கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வருகின்றது. புதிய திட்டங்களை நம்முடைய அரசு இந்திய அரசின் அனுமதி கோரி அனுப்பும்போது, இந்தத் திட்டங்களின் உற்பத்தி, தமிழகத்தின் தேவை ஆகியவற்றை கணக்கிலே எடுத்துக் கொண்டுதான் புதிய திட்டங்களுக்கு இந்திய அரசு அனுமதி அளித்து வருகிறது அல்லது நிராகரித்து வருகிறது. ஆகவே இந்தத் திட்டங்களை மத்திய அரசு ஏற்கெனவே கணக்கில் கொண்டுள்ளதால், இதிலே உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்தை தமிழகத்திற்குத் தரவேண்டும், பற்றாக்குறை தீர அதுதான் வழி என்றும் தெரிவித்திருக்கிறோம்.

தேர்வாளருக்கான மதிப்பூதியத்தை உயர்த்துதல்.

*83. **வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்படும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வணிகவியல் தேர்வுகளில், தேர்வாளருக்கான மதிப்பூதியம், 1974-க்குப் பின்னர் திருத்தி அமைக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அத்தொகையினைத் தற்போது உயர்த்த அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) மதிப்பூதியங்களை உயர்த்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசிலனையில் உள்ளது.

செல்வி ஆ லீலாவதி : விலைவாசி அதிகப்படியாக உயர்ந்துள்ள காரணத்தால், பத்தாவது, 12-வது வகுப்புகளுக்கான விடைத்தாள்களைத் திருத்தும் ஆசிரியர்களுக்கு உள்ள மதிப்பூதியத்தைத் திருத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனிக் கேள்வி போடவும்.